காலாண்டுப் பொதுத் தேர்வு, செப்டம்பர் - 2013

TVK

www.tnschools.co.in

பதிவு எண்

வகுப்பு 10

நேரம்: 2.30 மணி

**தமிழ் முதல் தாள்**

மதிப்பெண்கள்: 100

**(LANGUAGE - PART A - TAMIL - PAPER I)**

(செய்யுள், உரைநடை)

**அறிவுரை:** 1. அனைத்து வினாக்களும் சரியாக அச்சுப்*பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின், அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

2. நீலம் அல்லது கருப்பு நிற மையினை மட்டுமே எழுதுவதற்கு பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு:** *i) விடைகள் தெளிவாகவும், குறித்த அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.*

*ii) வினா VIக்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.*

## பிரிவு - I (மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **6×1=6**

1) திருக்குறளைப் போற்றிப் பாடும் நூல் .............
அ) நால்வர் மணிமாலை ஆ) திருவள்ளுவமாலை இ) இரட்டை மணிமாலை

2) ''நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்'' என்று பாடியவர் .............
அ) கவிமணி ஆ) பாரதிதாசன் இ) பாரதியார்

3) சேக்கிழார் பெருமான் அருளியது .............
அ) சிவபுராணம் ஆ) பெரியபுராணம் இ) தலபுராணம்

4) மும்பையில் அம்பேத்கர் சிறிது காலம் ............. பேராசிரியராகப் பணியாற்றினார்.
அ) வாணிகவியல் ஆ) பொருளியல் இ) அறிவியல்

5) இன்றைய மதுரையில் ............. தமிழ்ச்சங்கம் இருந்தது.
அ) மூன்றாம் ஆ) இரண்டாம் இ) முதலாம்

6) நுண்ணிய நூல் பல கற்றவர்க்கே அமைந்த அரிய கலை
அ) ஓவியக்கலை ஆ) இசைக்கலை இ) பேச்சுக்கலை

### பகுதி - 2

**கோடிட்ட இடத்தை நிரப்புக:** **6×1=6**

7) கம்பரைப் புரந்தவர் .............
8) நல் என்னும் அடைமொழி பெற்ற நூல் .............
9) போலிப் புலவர்களைத் தலையில் குட்டுபவர் .............
10) பெரியார் சமூக ............. எதிர்த்தவர் மூடக்கருத்துகளை .............
11) இயங்குரு படங்கள் பார்க்க ............. இருக்கும்.
12) இலெமூரியாவை ............. நாகரிகத் தொட்டில் என்பர்.

### பகுதி - 3

**பொருத்துக:** **4×1=4**

13) அரி - மணம்
14) மேதி - அழகு
15) சந்தம் - நெற்கதிர்
16) விரை - எருமை

### பகுதி - 4

**விடைக்கேற்ற வினா அமைக்க:** **4×1=4**

17) பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என்று விரும்பியவர் பெரியார்.
18) பெரியார் பெண்ணுரிமைக்கு ஊறுவிளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார்.
19) அம்பேத்கர் 1946 ஆம் ஆண்டு மக்கள் கல்விக் கழகத்தைத் தோற்றுவித்தார்.
20) திரைப்படம் காட்ட ஒளி ஒலிப் படக்கருவி பயன்படுகிறது.

## பிரிவு - II (மதிப்பெண்கள் - 20)

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **5×2=10**

21) ஞாலம் கருதினும் கைகூடும் எப்போது?
22) பழியிலா மன்னனாய் வாழ்பவனின் பண்புகளாகக் கணிமேதாவியார் குறிப்பிடுவன யாவை?
23) ''அன்புள இனி நாம் ஓர் ஐவர்கள் உளரானோம்'' - யார் யாரிடம் கூறியது?
24) பாரதிதாசனின் படைப்புகள் ஏதேனும் நான்கு கூறுக.
25) திருநாவுக்கரசர் அப்பூதி அடிகளிடம் வினவியது என்ன?
26) வயலின் வரப்புகளாகக் கூறப்படுவன எவை?
27) ஐம்பெருங்காப்பியங்கள் யாவை?

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **5×2=10**

28) தமிழ்மொழியின் தனித்தன்மைகளை எழுதுக.

www.tnschools.co.in

29) பேச்சின் முக்கூறுகள் யாவை?
30) பெரியாரின் பெண்விடுதலைச் சிந்தனைகளை எவ்வாறு பகுக்கலாம்?
31) மொழிமாற்றம் என்றால் என்ன?
32) கல்விப்படங்கள் வாயிலாக நீவீர் அறிவன யாவை?
33) அம்பேத்கர் குறித்து நேரு புகழ்ந்து கூறியது எது?
34) ஏற்றுமதி, இறக்குமதி குறித்துக் கூறும் நூல்கள் யாவை?

## பிரிவு - III (மதிப்பெண்கள் - 24)

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **3×4=12**

35) மாணிக்கவாசகர் இறைவனிடம் எவ்வாறு வேண்டுகிறார்?
36) வாயிற்காவலன் பாண்டிய மன்னனை எவ்வாறு வாழ்த்தினான்?
37) தமிழ்மொழி வளர்ச்சி அடைவதற்குப் பாரதிதாசன் கூறும் வழி வ்கைகள் யாவை?
38) விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை யாவை?
39) தலைவனுக்குத் தோழி கூறும் செய்திகளை நற்றிணைப் பாடல் வழித் தொகுத்து எழுதுக.

### பகுதி - 2

**கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றனுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **3×4=12**

40) பேச்சின் தொடக்கம் எவ்வாறு அமைய வேண்டும்?
41) பெண்கல்வி குறித்து பெரியார் கூறும் கருத்துகள் யாவை?
42) கல்வி வளர்ச்சிக்கு அம்பேத்கர் ஆற்றிய பணி யாது?
43) கடல் வாணிகம் குறித்து எழுதுக.
44) கருத்துப்படம் குறித்து எழுதுக.

## பிரிவு - IV (மதிப்பெண்கள் - 10)

45) **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** **5**

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும் தொடை புணர்ந்து
அருவிலை நன்கலம் அமைக்குங்காலை
ஒருவழித் தோன்றி யாங்கு என்றும் சான்றோர்
சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே.

i) இப்பாடல் இடம் பெற்ற சங்க இலக்கியத்தின் பெயரென்ன?
ii) சான்றோர் யாருடன் சேர்வர்?
iii) சான்றோர் நட்புக்கு உவமையாகக் கூறப்படுவன யாவை?
iv) ''தொடை'' - இதன் பொருள் என்ன?
v) இப்பாடலில் பயின்று வந்துள்ள அடி எதுகையை எடுத்து எழுதுக.

46) **கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** **5**

''ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்'' என்னும் வள்ளுவர் வாய்மொழியை நன்குணர்ந்தவர் பெரியார். ஒழுக்கமென்பதும் கற்பென்பதும் பெண்களுக்கு மட்டும் என்றில்லாமல் ஆண், பெண் இருபாலார்க்கும் பொதுவாகும் என்பது அவர்தம் கருத்து.

பெரியார் சமூக முரண்களை எதிர்த்தவர். மூடக்கருத்துகளை முட்டறுத்தவர்; தொலைநோக்குப் பார்வையுடையவர்; பகுத்தறிவுக்குப் பொருந்தாதவற்றை அறுத்து எறிந்தவர். சமூக மாற்றத்தை விரும்பியவர். பெண்களே சமூகத்தின் கண்கள் எனக் கருதியவர். பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர்.

i) இப்பகுதியில் வந்துள்ள வள்ளுவர் வாய்மொழி எது?
ii) ஒழுக்கம் என்பது பற்றி பெரியார் கூறும் கருத்து யாது?
iii) பெரியார் எவற்றை அறுத்து எறிந்தார்?
iv) சமூகத்தின் கண்களாக பெரியார் யாரைக் கருதினார்?
v) பெண்களை அடிமைத்தளையிலிருந்து மீட்டவர் யார்?

## பிரிவு - V (மதிப்பெண்கள் - 26)

### பகுதி - 1

**கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **2×8=16**

47) அ) ''தேரா மன்னா'' என விளித்துக் கண்ணகி கூறியன யாவை? **(அல்லது)**
ஆ) அப்பூதியடிகளார் இல்லத்தில் நிகழ்ந்ததனை விவரிக்க.
48) அ) செம்மொழிக்குரிய எவையேனும் ஐந்து தகுதிப்பாடுகளை விளக்கி எழுதுக. **(அல்லது)**
ஆ) தமிழரின் இசைக்கலை குறித்துத் தொகுத்து எழுதுக.

### பகுதி - 2

49) **செய்யுள் வடிவில் விடை தருக:** **2+2+3+3=10**
அ) ''ஒழுக்கத்தின்'' எனத் தொடங்கும் குறள்.
ஆ) ''செயல்'' என முடியும் குறள்.
இ) விடுநனி எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்.
ஈ) ''மெய்தான் அரும்பி'' எனத் தொடங்கும் வாழ்த்துப்பாடல்.

-✿-✿-✿-